# சட்டமும் நீங்களும்

## LAW AND YOU





# பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்

# LAW RELATING TO ADOPTION OF THE CHILD


சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்,

**R.Thirukumaranathan,** LL.B (COL), LL.M (COL.), ATTORNEY-AT-LAW.


USAID FROM THE AMERICAN PEOPLE

CPPHR Centre for the Promotion and Protection of Human Rights


மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,

இல: 238, உட்துறைமுக வீதி,

திருகோணமலை.

# சட்டமும் நீங்களும்

# LAW AND YOU

## 4

# பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்

# LAW RELATING TO ADOPTION OF THE CHILD


தொகுப்பாக்கம்:

**சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்**

**R.THIRUKUMARANATHAN, LL.B (COL.); LL.M (COL.),**
**ATTORNEY-AT-LAW**
**P.G Diploma in Criminology & Criminal Justice (J' PURA)**
**Diploma in Conflict Resolution (BCIS) (U PEACE – COSTARICA)**



இலவச வெளியீடு:

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

## வெளியீட்டு உரை:

**OUR VISION: To Build a Society on the foundation of Equality**

**OUR MISSION: To Promote & Protect Human Rights through many and varied activites**

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம், இயேசுசபை துறவிகளினால் திருகோணமலை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் நிகழ்ந்த சுனாமி ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புகளின் போது ஏனைய சமூகப்பணி நிறுவனங்களோடு இணைந்து சமூகத்தை மீளக்கட்டியெழுப்ப பல பணிகளை ஆற்றியது.

2006 ஆம் ஆண்டு மாவிலாறில் உருவான யுத்த ஆரம்பத்தின் போது இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சேவைகளைப் புரிந்து கொண்டிருந்தது. அவ் வேளையில் நடந்து கொண்டிருந்த யுத்தத்தின் பின்னணியில் மனித உரிமைகள் பல கோணங்களிலும் மீறப்பட்டுக் கொண்டிருந்த போது மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாப்பதற்குமென எமது சேவை விஷ்தரிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் இன்று மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம் பல வகையான சேவைகளை ஆற்றிவருகின்றது. அவற்றில் சில பின்வருமாறு:-

- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள், கற்கை நெறிகளை வழங்குதல்

- அவசரகாலவிதிகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் **(E.R & P.T.A)** ஏற்பாடுகளின் பின்னணியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை சார்பாக இலவச சட்ட உதவி வழங்கலும், சிறைச்சாலை சென்று கைதிகளைச் சந்தித்தல்.

- யுத்தத்தில் பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவன் இல்லாத சூழ்நிலையில் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.

- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி கற்றலுக்கான உதவிகளை வழங்கல்

- மனித உரிமைகள் சார்பாக பரிந்துரைகளை மேற்கொள்ளல்

- குடும்ப வன்முறை, குடும்பப்பிணக்குகள், காணிப்பிணக்குகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல சமூகப்பிரச்சனைகளுக்கு இலவச சட்ட உதவி, சட்ட ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இதன் பின்னணியிலேயே சாதாரண மக்கள் மத்தியில் சட்ட அறிவையும், உரிமைக் குரலையும் மேம்படுத்த ‘‘சட்டமும் நீங்களும்’’ என்ற தலைப்பில் சில சட்டவிடயங்கள் சிறு கைநூல் வடிவத்தில் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது.

இக் கைநூல்களினூடாக பொதுமக்களும், சட்ட அறிவை ஊக்குவிப்பாளர்களும் இதனைப் பயன்படுத்தி நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறான கைநூல்களில் ஒன்றே இந்த வெளியீடு ஆகும்.

எமது நிறுவனம் **"இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்" (LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE)** **"பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்"** (**LAW RELTAING TO MAINTANENCE APPLICATION) மற்றும் "பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாவல் தொடர்பான சட்டம்" (LAW RELATING TO GUARDIANSHIP AND CUSTODY OF THE CHILD)** எனும் தலைப்புக்களில் மூன்று சட்டக் கைநூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளது. தற்போது **"பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்" (LAW RELATING TO ADOPTION OF THE CHILD)"** எனும் தலைப்பில் எமது நிறுவனத்தின் நான்காவது சட்டக் கைநூல் வெளியிடப்படுகின்றது.

இச்சட்டக் கைநூலினை வாசித்து பயன்பெறுபவர்கள் இந்நூல் பற்றிய உங்களது அபிப்பிராயங்களையும் மற்றும் கருத்துக்களையும் எமது நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களது ஆலோசனைகளும் மற்றும் அபிப்பிராயங்களும் நாம் தொடர்ச்சியாக இத்தகைய சட்டக் கைநூல்களை வெளியிடுவதற்கு உந்துசக்தியாக இருக்கும.

மேலும் இச்செயற்பாட்டிற்கு எமக்கு தொடர்ச்சியாக நிதி அனுசரணை வழங்குகின்ற **USAID** நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருட்தந்தை வே.யோகேஸ்வரன் S .J.**
**பணிப்பாளர்,**
**ம.உ.மே.பா. நிலையம்,**

இல: 238, உட்துறைமுக வீதி,
திருக்கோணமலை.

எமது தொடர்புகளுக்கு:-

அருட்தந்தை வீ.யோகேஸ்வரன் **S.J.**
தொ.பே.இல: 0714288932
அலுவலகம்: **CPPHR,**
இல: 238, உட்துறைமுக வீதி,
திருக்கோணமலை.
தொ.பே:இல: 026-3260895.

# முகவுரை:

தாய் மற்றும் தந்தையை ஆகிய இருவரையும் அல்லது பெற்றோர்களில் ஒருவரையேனும் இழந்த பிள்ளைகளுக்கும், தாய் மற்றும் தந்தை ஆகியோர் உயிரோடு இருப்பினும் கூட அவர்களது வறுமை நிலை காரணமாக அவர்களால் தங்களது பிள்ளைகளுக்கு தேவையான நாளாந்த அவசியத் தேவைகளையும் மற்றும் போதிய பாதுகாப்பையும் வழங்கமுடியாதிருக்கும் அத்தகைய பெற்றோர்களினது பிள்ளைகளுக்கும் மற்றும் தாய் தந்தை இருவரினாலும் கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கும் சட்டரீதியாகப் புதிய பெற்றோர்களைப் பெற்றுக்கொளவதற்கும் மகவேற்பு செயன்முறையானது (**ADOPTION MECHANISM**) வாயப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

அதேபோன்று உள்நாட்டில் வாழ்ந்துவருகின்ற போதிலும் குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத வசதி படைத்த திருமணமான தம்பதிகள் மற்றும் வெளிநாட்டில் அந்நாட்டு குடியுரிமைபெற்று வாழ்ந்துவருகின்ற போதிலும் குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத வசதி படைத்த திருமணமான தம்பதிகள், தங்களுக்கு பிள்ளையை சட்டரீதியாகத் தத்தெடுத்துக் கொள்வதற்கும் இச் செயன்முறையானது வழிவகுத்துக் கொடுக்கின்றது.

எனவே அத்தகைய குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத வசதி படைத்த திருமணமான தம்பதிகளும் ஏனையோரும் மகவேற்பு செயன்முறை பற்றிய அதாவது பிள்ளையொன்றை தத்தெடுப்பது தொடர்பில் இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் பற்றி ஓரளவிற்கேனும் அறிந்திருப்பது விரும்பத்தக்கதாகும்.

சாதாரண பொதுமக்கள் சட்டம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அவர்கள் வாசித்து

விளங்கிக் கொள்ளக்கூடிய மொழியில் சாதாரண உரையாடல் வடிவில் சிறு சட்டக் கைநூல்கள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு பொதுமக்கள் மத்தியில் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் **"பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்" (LAW RELATING TO ADOPTION OF THE CHILD)"** எனும் தலைப்பில் நான்காவது சட்டக் கைநூல் ஆக்கப்பட்டுள்ளது.

**"இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்" (LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE)** மற்றும் **"பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்" (LAW RELTAING TO MAINTANENCE APPLICATION)** ஆகிய இரண்டு சட்டக் கைநூல்களும் சிங்கள மொழி பேசும் சாதாரண மக்களின் நலன்கருதி சிங்கள மொழியில் ஏற்கனவே மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

**"பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்" (LAW RELATING TO ADOPTION OF THE CHILD)"** எனும் தலைப்பிலான இச்சட்டக் கைநூலைத் தொடர்ந்து **"வேலையாட்களின் உரிமைகள் தொடர்பான சட்டம்" (LAW RELATING TO RIGTHTS OF WORKMEN)** எனும் தலைப்பிலான சட்டக் கைநூல் ஆக்கப்படவுள்ளது.

இத்தகைய சட்டக் கைநூல்களை தொடர்ந்து தொகுத்து வழங்குவதற்கு என்னை தொடர்ச்சியாக ஊக்குவித்துக் கொண்டிருக்கும் **"மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான அருட்தந்தை வீ.யோகேஸ்வரன்"** அவர்களுக்கும் மற்றும் இச்செயற்பாட்டை தொடரந்து செயசெயற்படுத்த வேண்டுமென என்னை தொடர்ச்சியாக

உற்சாகப் படுத்திக்கொண்டிருக்கும் நீதித்துறை மற்றும் சட்டத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஏனைய கல்வியியலாளர்களும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இத்தகைய சட்டக் கைநூல்களை தொடர்ச்சியாக தொகுத்து வழங்குவதற்கு எனக்கு பல்வேறு வடிவங்களில் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிக் கொண்டிருக்கும் ஏனையோருக்கும் மற்றும் இச்செயற்பாட்டினை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு தொடர்ச்சியாக நிதி அனுசரணை வழங்கிக்கொண்டு வருகின்ற **USAID** நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள சட்டக் கைநூல்கள் பற்றி வாசகர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற அபிப்பிராயங்களும் கருத்துக்களும் இத்தகைய ஆக்கங்களைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வரவேண்டும் என்பது தொடர்பில் என்னை மேலும் உற்சாகம் ஊட்டுவதாக உள்ளன. அவ்வாறாக கிடைக்கப்பெற்றவற்றிலிருந்து **தொழில் நியாயசபை தலைவரினதும், ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் மற்றும் உப்புவெளி பிரதேச சபை நூலகர் ஆகியோர்களின்** கருத்துக்களும் அபிப்பிராயங்களும் இச்சட்டக் கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச்சட்டக் கைநூலினை வாசிப்பவர்கள் மற்றும் பயன் பெறுபவர்கள் இந்நூல் பற்றிய உங்களது அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் எழுத்து மூலம் அனுப்பி வைக்கும்படி தயவுடன் வேண்டப்படுகின்றீர்கள். உங்களது அபிப்பிராயங்களும் கருத்துக்களும் இத்தகைய சட்டக் கைநூல்களை தொடர்ச்சியாகத் தொகுப்பதற்கு உந்துசக்தியாக இருக்கும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்,**
**R.THIRUKUMARANATHAN, LL.B (COL), LL.M (COL.),**
**ATTORNEY-AT-LAW.**

සිවිල් අභියාචනා මහාධිකරණය - ත්‍රිකුණාමලය
மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் - திருகோணமலை
**CIVIL APPELLATE HIGH COURT - TRINCOMALEE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| විනිසුරු නිල මැදිරිය<br>நீதிபதி<br>Judge's Chamber | 026-2226013 | ලේඛකාධිකාරී<br>பதிவாளர்<br>Registrar | 026-2222086 | ඊමේල්<br>இ.மெ.யில்<br>E.mail | hcjudge@sltnet.lk |
| මගේ අංකය<br>எமது இல.<br>My No. | | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 25.10.2011 |

# அணிந்துரை

இன்றைய உலகில் சட்டம் பற்றிய அறிவு சகல மக்களுக்கும் தேவையான தொன்றாகும். அந்த வகையில் சட்டங்கள் பற்றி சாதாரண மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் சட்டத்தரணி திரு.இரா.திருக்குமாரநாதன் அவர்கள் பல சட்டத் தொகுப்புக்களை ஆக்கியுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். அவரால் இது வரையில் சாதாரண மக்கள் வெகு இலகுவாக சட்டங்களை அறியக் கூடிய வகையில் பல சட்டத் தொகுப்புக்கள் ஆக்கப்பட்டு திருக்கோணமலை மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும், பாதுகாப்பிற்குமான நிலையத்தினால் சாதாரண மொழியில் அச்சிட்டு வெளியிட்டமை வரவேற்கத் தக்கதொன்றாகும். அந்த வகையில் அவரால் சட்டமும் நீங்களும் என்ற சிறு கைநூலில் மகவேற்பு சம்பந்தமான சட்ட ஏற்பாடுகள் இலகு தமிழில் எழுதப்பட்டு வெளியிடப் படுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மகவேற்பு என்பது சட்டங்கள் வளர்ச்சி அடையாத காலத்திற்கு முன்பிருந்தே குழுந்தைப் பாக்கியம் அற்ற தம்பதியர் இன்னொருவருடைய குழந்தையைத் தத்தெடுத்து தங்களுடைய குழுந்தையைப் போல் தங்கள் வாரிசாக வளர்த்து வந்தார்கள் என அறியக் கிடைக்கின்றது. குழுந்தைப் பாக்கியம் அற்ற தம்பதியினர் தமது சொத்துக்களுக்கு வாரிசாகவும், தங்களுடைய வாரிசாகவும்,

ஒரு குழந்தையைத் தத்தெடுத்து தங்களுடைய குழுந்தையைப் போல் வளர்ப்பது ஆதிகாலந்தொட்டே மனித வாழ்க்கையில் ஒரு தேவைப்பாடாக இருந்து வந்துள்ளது. இவ்வாறான மகவேற்பானது எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடையேயும் காலாகாலந்தொட்டே இருந்து வந்துள்ளது. சட்ட வளர்ச்சிக்கு முன்னர் இவ்வாறான மகவேற்பு மரபு வழியாக இருந்து வந்துள்ளது. உதாரணமாக தேசவழமையில் மகவேற்புக்கு சம்பந்தமான சட்ட மரபுகள் இருந்துள்ளது என்பதை அறியலாம். ஆனால் அவ்வாறான தேசவழமைச் சட்ட மரபுகள் இன்று வழக்கொழிந்து விட்டன.

தேசவழமைச் சட்ட மரபுகளின் பிரகாரம் குழந்தைகள் அற்ற தம்பதியினர் தங்களுடைய உறவினர்களிடமிருந்தோ அல்லது வேறு ஒருவரிடமிருந்தோ ஒரு குழந்தையை தங்களுக்கும், தங்களுடைய சொத்துக்களுக்கும் வாரிசாக மகவேற்பு செய்வதற்கு சில சமய சடங்குகளை நிறைவேற்றுவது வழமையாகும். அதாவது ஊரில் உள்ள பெரியவர்களையும், தங்களுக்கு சேவை செய்யும் தொழிலாளர்களையும், சுற்றத்தாரையும், உறவினர்களை யும், மதகுருமார்களையும், அழைத்து தாம் மகவேற்பு செய்யும் குழந்தையை மஞ்சள் நீரால் குளிப்பாட்டி அந்தக் குழந்தையை அவர்கள் தத்தெடுப்பதாகப் பிரகடனம் செய்தார்கள். அன்றிலிருந்து அந்தக் குழந்தை அவர்களின் பிள்ளையாகவும், அவர்களது சொத்துக்கு வாரிசாகவும் கொள்ளப்படும். ஆனால் இவ்வாறான சட்ட மரபு இன்று வழக்கொழிந்துவிட்டது.

இன்று மகவேற்பு செய்வதற்காக இலங்கையில் 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மகவேற்பு திருத்தச் சட்டம், 1943 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மகவேற்பு திருத்தச் சட்டம், மற்றும் 1992 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மகவேற்பு திருத்தச் சட்டம் என்பன குழுந்தைகளை மகவேற்பு செய்வது தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்டங்களாக உள்ளன. மேலும் மகவேற்பு என்றால் என்ன? அவ்வாறான சட்டங்கள் எதற்காக உருவாக்கப்பட்டுள்ளன? யார் யார் மகவேற்பு செய்யலாம்? மற்றும் எவ்வாறு ஒரு குழுந்தை நீதிமன்றின்

முன்பு மகவேற்பு செய்யப்படலாம்? என்பது பற்றி சட்டத்தரணி திரு. இரா. திருக்குமாரநாதன் அவர்கள் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் இச்சிறு கைநூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

இச் சட்டக் கைநூலை ஆக்கிய சட்டத்தரணி திரு. இரா. திருக்குமாரநாதன் அவர்களுக்கும், மற்றும் இவ்வாறான சட்டக் கைநூல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்ற திருக்கோணமலை மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையத்துக்கும் எனது பாராட்டுக் களைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூல் நிச்சயமாக சாதாரண பொது மக்களுக்கு மகவேற்பு செய்வது தொடர்பில் தெளிவான சட்ட விளக்கத்தை அளிக்குமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது போன்ற இன்னும் பல சட்டக் கைநூல்களை அவர் தொடர்ந்தும் எழுத வேண்டும் என்றும், அவரது இந்த சேவை மேன்மேலும் தொடர வேண்டும் என்றும் நான் வாழ்த்துகின்றேன்.

சொ. தியாகேந்திரன்.

மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி,

திருக்கோணமலை.

S.Thiyahendran
High Court Judge (Commissioner)
(Criminal & Civil Appeal)
High Court, Trincomalee

# தொழில் நியாயசபைத் தலைவரின் பார்வையில் சட்டமும் நீங்களும்

කම්කරු විනිශ්චය සභාව - ත්‍රිකුණාමලය
தொழில் நியாய சபை - திருகோணமலை
Labour Tribunal - Trincomalee

සභාපති නිල මැදිරිය
தலைவரின் சமாதான அறை
President's Chamber } 026 - 3207145

සහකාර ලේකම්
உதவிச் செயலாளர்
Asst.Secretary } 026 - 3263352

---

මගේ අංකය
எனது இல.
My No. }

දිනය
திகதி
Date. } 2011.11.29

ඔබේ අංකය.
உமது இல.
Your No. }

Attorney at Law Mr.R.Thirukumaranathan has done a great deal!! for he has not only written questionnaire type two booklets on “Law Relating to Maintenance Application” and “Law Prevention of Domestic Violence” but also has got it translated into Sinhala.

Undoubted these booklets help the general public to seek justice before the court of law in their day to day confrontations, as the problems identified by these two booklets could be considered as day to day problems that are confronted by the people.

Though these booklets are focused on general public, in my opinoio these would be much helpful to junior Attorneys at Law too, to muster their knowledge on these topics as it is very common that juniors are called upon to handle this type of applications.

So, Mr.Thirukumaranathan's endeavour to enlighten citizen on law could be appreciated. And hope that he would continue in his endeavour.

……………………………..

F.S.Mahfi,
President/ Addl,Magistrate,
Labour Tribunal,
Court Complex,
Trincomalee.

Sahana Mahfi
President / Addl Magistrate,
Labour Tribunal,
Court Complex,
Trincomalee

# ஓய்வு பெற்ற அதிபரின் பார்வையில் ‘சட்டமும் நீங்களும்’

## சட்டமும் நீங்களும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்

மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு சட்ட உதவியை ஒருவர் நாடும் போது, .அப்பிரச்சனை தொர்பான சட்டவிதிமுறைகள் என்ன என்பதை அறியாது அல்லலுறும் மக்கள் இன்றும் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்ள உதவுவது தான் இந்நூலின் நோக்கம் என நான் கருதுகின்றேன்.

சட்டமும் நீங்களும் என்னும் தொனிப்பொருளின் அடிப்படையில் **பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்** என்னும் நூல் சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை நான் படித்தேன், சுவைத்தேன்.

இது இவரது இரண்டாவது நூலாகும். முதலாவது நூல் ‘இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம்’ என்னும் தலைப்பில் ஏற்கனவே வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து ‘பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சட்டம் பற்றிய நூலும் அதனை தொடர்ந்து பிள்ளையினது மகவேற்பு தொடர்பான சட்டக்கைநூல் வெளிவர இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூல்களைப் படிக்கும் சாதாரண மக்கள் நன்கு விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் சட்ட நூலுக்கு கலைச்சொற்களை இலகுபடுத்தி எழுதியிருப்பதனால்

இதனை அனைவரும் படித்து விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்மொழியில் இந்நூல் வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. தமிழ் பேசும் மக்கள் சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்ள இலகுவாக அமையும்.

பராமரிப்பு என்றால் என்ன? குடும்ப அங்கத்தவர்களின் பராமரிப்பு கோரிக்கை தொடர்பில் ஏற்புடைய சட்டம் எது? அதன் நோக்கம் முதியோர் பராமரிப்பு , பிள்ளை என்பதன் கருத்து , பிள்ளை பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றைச் செய்யும் போது எத்தகைய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். பெற்றோர் இருவரும் பிரிந்து வாழும் போது யார் பிள்ளையின் பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும். கணவன் தனது மனைவியிடம் பராமரிப்பு கோரமுடியுமா? முஸ்லீம்கள் பராமரிப்பு தொடர்பான விடயங்களும் மேலும் பல விடயங்களையும் உள்ளடக்கி எட்டு மாதிரி மனு விண்ணப்பங்களும் உள்ளடக்கி எழுதப்பட்ட இந்நூல் வாசிக்க வாசிக்க சுவையாகவும் சட்ட நுணுக்கங்களை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் எழுதப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது.

இந்நூலைப் படிப்போர் பராமரிப்பு சட்டவிதிகளை அறிந்து கொண்ட பின் நீதிமன்றம் சென்று சட்ட நடவடிக்கை எடுக்காமல், தாங்களே வாழ்க்கை முறைகளை சிறப்பாக அமைத்துக் கொள்ளவும். இந்நூல் வழிவகுக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஜோ.நோமன் பல்தஸார்,**
**RTD.S.L.P.S – I,**

**இல.85, புனித மரியாள் வீதி, திருகோணமலை**

# உப்புவெளி பட்டணமும் சூழலும் பிரதேச சபை நூலகரின் பார்வையில் ‘சட்டமும் நீங்களும்’

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல.238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

## சட்டமும் நீங்களும் - நூல்

தங்களால் உப்புவெளி நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட **‘சட்டமும் நீங்களும்’** என்னும் நூல் கிடைக்கப்பெற்றது. மிக்க நன்றி

இவ் நூல் வாசகர்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்படும். சமூகம் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டிய அவசியமும், தேவையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பது உண்மை.

மேலும் பொது அறிவு வளர்ச்சிக்காகவும், வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்காகவும் மக்களுக்கு சென்றடையக்கூடிய தகவல்களை வழங்கும் நோக்குடன் ‘தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோர் தினத்தில் மூன்று நூல்கள் நூலகத்தால் தெரிவு செய்யப்பட்டு இவ் நூல்களை கட்டாயம் வாசிப்பதற்காக நூலகத்திற்கு வரும் வாசகர்களிடம் வேண்டப்படுகின்றோம். இவ்வாறு வழங்குவதன் மூலம் வாசிப்பை ஊக்குவிக்கின்றோம். இவ் நூல்களிலிருந்து பெற்ற அறிவைப் பரிசீலனை செய்வதற்காக அவ் நூல்களிலிருந்து வினா – விடைப்போட்டி மூலம் பரிசுகள் வழங்குகின்றோம்.

அந்த வகையில் இம்முறை (தேசிய வாசிப்பு மாதம் - 2011) சட்டமும் நீங்களும் என்னும் நூல் கட்டாய வாசிப்பிற்காக உள்ளடக்கப்படும். அதன் மூலம் இந்நூலின் குறிக்கோள் வெற்றி பெறும் என்பது நம்பிக்கை.

உப்புவெளி நூலக சேவை சமூக அறிவு வளர்ச்சிக்காக பல்வேறு துறை சார்ந்த நிலையங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தகவல்களை வழங்கி வருகின்றது. சட்டத்துறை நிலையங்களும் நூலகத்துடன் நட்புறவை ஏற்படுத்தி சமூகத்தை பாதுகாக்கும் அறிவு வளர்ச்சிக்கான தகவல்களை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி.

**‘நெறி தவறாத நீதி பிறக்க, மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான சட்டங்கள் தளைக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்’**

**திருமதி.கா.இராஜேஸ்வரசிங்கம்**
நூலகர்
ப.சூ. பிரதேசசபை,
உப்புவெளி

# பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்

# LAW RELATING TO ADOPTION OF THE CHILD

மகவேற்பு செயன்முறையானது **(ADOPTION MECHANISM)** தாய் மற்றும் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கும், தாய் மற்றும் தந்தை ஆகியோர் உயிரோடு இருப்பினும்கூட அவர்களது வறுமை நிலை காரணமாக அவர்களால் தங்களது பிள்ளைகளுக்கு தேவையான நாளாந்த அவசியத் தேவைகளையும் மற்றும் போதிய பாதுகாப்பையும் வழங்கமுடியாதிருக்கும் அத்தகைய பெற்றோர்களினது பிள்ளைகளை மகவேற்புச் செய்யவதற்க்கு வழிவகுக்கின்றது.

தாய் தந்தை இருவரினாலும் கைவிடப்பட்ட பிள்ளைகள் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நீதமன்றத்தின் மூலம் சட்டரீதியான புதிய பெற்றோர்களைப் பெற்றுக்கொள்வதற்கு மகவேற்பு செயன்முறையானது **(ADOPTION MECHANISM)** வழிவகுப்பதுடன் அத்தகைய பிள்ளைகளினது நலன்களையும், உரிமைகளையும் மற்றும் அக்கறைகளையும் சிறப்பாகப் பாதுகாப்பதாகவும் அமைகின்றது. மேலும் குறித்த பிள்ளைகளுக்கு தேவையான புதிய இல்லச் சுற்றாடல் ஒன்றையும் இது ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சுனாமிப்பேரலை போன்ற இயற்கை அனர்த்தம் மற்றும் யுத்த அனர்த்தம் என்பவை காரணமாக ஏராளமான பிள்ளைகள் தமது பெற்றோர்களையும் மற்றும் உறவினர்களையும் இழந்து அநாதைகளான நிலையில் இருப்பதுடன் ஏராளமான சிறுவர் இல்லங்கள் தோற்றம்

பெற்றிருப்பதையும் எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பிள்ளைகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பையும் கட்டுக்காவலையும் வழங்கும் பொருட்டு குறித்த பிள்ளைகளை சட்டரீதியாக மகவேற்பு செய்ய (அதாவது சட்டரீதியாகத் தத்தெடுக்க) விருப்பம் கொண்டுள்ள சட்டரீதியாகத் திருமணமான தம்பதிகள் குறித்த விடயம் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் பற்றி ஓரளவிற்கேனும் அறிந்திருப்பது விரும்பத்தக்கதாகும்.

அதே போன்று உள்நாட்டில் வாழ்ந்துவருகின்ற குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத வசதி படைத்த திருமணமான தம்பதிகள் மற்றும் வெளிநாட்டில் அந்நாட்டு குடியுரிமைபெற்று வாழ்ந்துவருகின்ற வசதி படைத்த திருமணமான தம்பதிகள், வெளிநாட்டில் வசதியுடன் வாழ்ந்துவருகின்ற போதிலும் குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத திருமணமான தம்பதிகள் மற்றும் வெளிநாட்டில் வாழ்ந்துவருகின்ற போதிலும் இரட்டை குடியுரிமைபெற்று வாழ்ந்துவருகின்ற திருமணமான தம்பதிகள் மற்றும் குழந்தைப்பேறு கிடைக்கப் பெற்றிருக்காத திருமணமான தம்பதிகள் ஆகியோர் இலங்கையில் உள்ள பிள்ளை ஒன்றை சட்டரீதியாக மகவேற்புச் செய்யவதாயின் (அதாவது சட்டரீதியாகத் தத்தெடுப்பதாயின்) எத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என அறிந்து கொள்ள வேண்டுமாயின் குறித்த விடயங்கள் தொடர்பில் தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் பற்றி ஓரளவிற்கேனும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

தற்காலத்தில் பெற்றோர்கள் இருவரையும் இழந்த ஏராளமான பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இத்தகைய சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளை ஒன்றை மகவேற்புச் செய்ய (சட்டரீதியாகத் தத்தெடுக்க) விரும்பும் ஒவ்வொருவரும்

அது தொடர்பில் எவ்வாறாகச் செயற்படல் வேண்டும் எத்தகைய நடவடிக்கைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் ஓரளவிற்கேனும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். மகவேற்புச் செயன் முறையானது **(ADOPTION MECHANISM)** , இவ்வாறாகச் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்ற பிள்ளைகளுக்கும் நீதிமன்றத்தின் மூலம் சட்டரீதியான புதிய பெற்றோர்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள நியதிச் சட்டங்களான **1941ஆம் ஆண்டின் 24ஆம்** இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம், **1943ஆம் ஆண்டின் 54ஆம்** இலக்க மகவேற்புத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் மற்றும் **1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க மகவேற்பு (திருத்தச்) சட்டம் என்பவை பிள்ளைகளைத் தத்தெடுப்பது தொடர்பான விடயங்களைக் கையாளும் சட்டங்களாக விளங்குகின்றன.

இச் சட்டக் கைநூலின் இறுதிப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்டவாறாக வழக்குகளை தாக்கல் செய்வதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டியாகக் கொள்ளக்கூடிய மாதிரி மனு மற்றும் சத்தியப்பத்திரம் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளன.



## 1. மகவேற்பு என்றால் என்ன?

ஒரு தனிப்பட்ட நபர் அல்லது திருமணமான கணவன் மனைவி இருவரும் இணைந்து மூன்றாம் திறத்தவருடைய குழந்தை / பிள்ளை ஒன்றை நீதிமன்றம் ஒன்றின் கட்டளையின் பிரகாரம் சட்டரீதியாக தத்தெடுத்தல் மகவேற்பு எனப்படும்.

இலங்கைப் பிரஜையாக இருக்கும் ஒருவர் தனித்து அல்லது திருமணமான கணவன் மனைவி இருவரும் இணைந்து குழந்தை / பிள்ளை ஒன்றினை மகவேற்பு செய்யமுடியும். எனினும் கணவன் மனைவி என்ற உறவைக் கொண்டிருக்காத இரண்டு தனிப்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குழந்தையை / பிள்ளையை மகவேற்புச் செய்யமுடியாது.

## 2. பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்வது தொடர்பில் (தத்தெடுப்பது தொடர்பில்) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள் எவை?

**1941ஆம் ஆண்டின் 24ஆம்** இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம், **1943ஆம் ஆண்டின் 54ஆம்** இலக்க மகவேற்புத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் மற்றும் **1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க மகவேற்பு (திருத்தச்) சட்டம் என்பவை குழந்தைகளை / பிள்ளைகளை மகவேற்பு செய்வது தொடர்பில் (தத்தெடுப்பது தொடர்பில்) தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள் ஆகும்.

## 3. பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்வது தொடர்பான வழக்கு (தத்தெடுப்பதற்கான

## வழக்கு) எந்த நீதிமன்றித்தில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்?

விண்ணப்பதாரர் அல்லது குழந்தை வசித்துவரும் பிரதேசத்தில் செயற்படுகின்ற மாவட்ட நீதிமன்றத்தில் பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்வதற்கான வழக்குத் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

## 4. திருமணம் செய்துள்ள ஒருவர் நீதிமன்றில் மகவேற்பிற்கு விண்ணப்பம் செய்யும்போது மற்றைய வாழ்க்கைத் துணையின் சம்மதத்தைக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டுமா?

ஆம். திருமணம் செய்த ஒருவர் மகவேற்பிற்கு விண்ணப்பிக்கும் போது மற்றைய வாழ்க்கைத் துணையின் சம்மதத்தைக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றைய வாழ்க்கைத் துணை நீதிமன்றத்தின் முன் சமூகமளிளக்க முடியாத நிலையில் இருப்பாராயின் அவரது சம்மதத்தை வெளிப்படுத்தும் சம்மதப் பத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆனாலும் சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அத்தகைய தேவைப்பாட்டைத் தளத்தலாம்.

## 5. அத்தகைய விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் எவை?

மற்றைய வாழ்க்கைத் துணை சித்த சுவாதீனமற்றவராக இருக்கின்ற பட்சத்தில் அல்லது

மற்றைய வாழ்க்கைத் துணையை கண்டுபிடிக்க முடியாதவிடத்து அல்லது

மற்றைய வாழ்க்கைத் துணை காணாமல்போய் ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலம் கழிந்து இருக்குமாயின் அல்லது

நீதிமன்றிம் திருப்திப்படக்கூடிய ஏனைய இதையொத்த சூழ்நிலைகள் காணப்படுமாயின் மற்றைய வாழ்க்கைத் துணை இயற்கைப் சம்மதம் அவசியமற்றதாகின்றது.

## 6. மகவேற்பிற்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரரின் தகைமை தொடர்பில் வயது மட்டுப்பாடு எதுவும் உண்டா?

ஆம். ஆத்தகைய மகவேற்பு விண்ணப்பம் ஒன்றைச் செய்யும் ஒருவர் 25 வயதிற்கு குறையாத வயதை உடையவராக இருத்தல் வேண்டும்.

## 7. மகவேற்புச் செய்பவருக்கும் மகவேற்கப்படும் குழந்தைக்கும் / பிள்ளைக்கும் இடையில் எத்தகைய வயது வித்தியாசம் காணப்படல் வேணடும்?

மகவேற்பிற்கு விண்ணப்பம் செய்பவருக்கும் மகவேற்கப்படும் குழந்தைக்கும் / பிள்ளைக்கும் இடையில் ஆகக் குறைந்தது 21 வயது வித்தியாசம் / இடைவெளி இருத்தல் வேண்டும்.

எனினும் சில விதிவிலக்கான சந்தர்பங்களில் குறித்த 21 வயது வித்தியாசம் / இடைவெளி இருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனை தொடர்பில் நீதிமன்றம் தளர்வான போக்கை கடைப்பிடிக்க முடியும்.

## 8. அத்தகைய சில வதில்கான சந்தர்பங்கள் எவை?

பின்வரும் **சந்தர்ப்பங்களில் குறித்த 21 வயது** வித்தியாசம் / இடைவெளி இருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனையை நீதிமன்றம் தளர்த்தலாம்:

i. குழந்தையானது தொடர்ச்சியாக நேரடியாக விண்ணப்பதாரியின் கீழ் வாழ்ந்து வருபவராக இருக்கும் போது,

ii. மகவேற்பு செய்யப்படும் குழந்தைக்கும் /பிள்ளைக்கும் இடையில் இரத்த உறவுமுறை காணப்படும் சந்நதர்ப்பம். அதாவது குழந்தையானது விண்ணப்பதாரியின் முழுமையான அல்லது அரைவாசியான சகோதரருடைய அல்லது சகோதரியுடையதாக அல்லது அவர்களின் கீழ் வாழ்ந்து வருபவராக இருக்கும் போது,

iii. குழந்தையானது விண்ணப்பதாரியின் மனைவியின் அல்லது கணவனின் வேறு திருமணத்தின் மூலமான குழந்தையாக உள்ள போது,

## 9. ஒரு தனிப்பட்ட ஆண், பெண் பிள்ளை ஒன்றை மகவேற்புச் செய்யமுடியுமா?

மகவேற்பு கட்டளைச் சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு தனிப்பட்ட ஆண் ஒருவர், ஒரு பெண் குழந்தையை மகவேற்பு செய்யமுடியாது.

எனினும் மாவட்ட நீதிமன்றமொன்று குழந்தையின் அதியுயர் பாதுகாவலன் என்ற வகையில் சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்படுவது குழந்தையின் நலனைப் பாதுகாக்கும்

என முழுமையாகத் திருப்திப்படும் சந்தரப்பங்களில் ஒரு தனிப்பட்ட ஆண் ஒருவர், பெண் குழந்தையை மகவேற்பு செய்ய அனுமதிக்கலாம்.

## 10. பிள்ளை ஒன்றினை மகவேற்பு செய்வதற்கு நீதிமன்றில் விண்ணப்பம் செய்யும்போது, அக்குழந்தையின்/ பிள்ளையின் இயற்கைப் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் சம்மதம் அவசியமானதா?

ஆம். குழந்தையின் / பிள்ளையின் இயற்கைப் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் சம்மதம் சம்மதம் அவசியமானதாகும்.

எனினும் குழந்தையொன்று/ பிள்ளையொன்று குறைந்தது இரண்டு வருடங்களுக்கு மேலாக தனிப்பட்ட ஒருவரினால் அல்லது தம்பதியினரால் (கணவன் மற்றும் மனைவி) தமது சொந்தப் பிள்ளை போன்று பராமரிக்கப்பட்டு கல்வியறிவூட்டப்பட்டு இருப்பதுடன், அவர்களாலேயே அக் குழந்தை/ பிள்ளை மகவேற்கப்படும் பட்சத்தில் அத்தகைய சம்மதம் அவசியமற்றது என நீதிமன்றம் தீர்மானம் மேற்கொள்ளலாம்.

இயற்கைப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் சித்த சுவாதீனமற்றவர்களாக இருக்கின்ற பட்சத்தில் அல்லதுஅவர்களைக் கண்டுபிடிக்க முடியாதவிடத்து அல்லது

இயற்கைப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் காணாமல்போய் ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலம் கழிந்து இருக்குமாயின் அல்லது

இயற்கைப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் குழந்தையை பாதுகாக்க முடியாதவர்கள் என நீதிமன்றம் கருதும் பட்சத்தில் அல்லது

- நீதிமன்றிம் திருப்திப்படக்கூடிய ஏனைய இதையொத்த சூழ்நிலைகள் காணப்படுமாயின் இயற்கைப் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதம் அவசியமற்றதாகின்றது.

## 11. குழந்தை / பிள்ளை ஒன்றினை மகவேற்பு செய்வதற்கு நீதிமன்றில் விண்ணப்பம் செய்யும்போது, அக் குழந்தையின் சம்மதம் அவசியமானதா?

ஆம். மகவேற்பு செய்யப்படும் குழந்தை / பிள்ளை பத்து வயதிற்கு மேற்பட்டதாயின் குழந்தையின் சம்மதம் கட்டாயமான தேவைப்பாடாகும்.

குழந்தை / பிள்ளை நல்லது கெட்டதை அறிந்து கொள்ளும் வயதிற்கு முன்னர் தத்தெடுப்பு கட்டளையை பெற்றுக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

அதாவது குழந்தை / பிள்ளை தனது இயற்கைப் பெற்றோர்களின் அடையாளங்களை மனதில் நிலைநிறுத்திக் கொள்வதற்கு முப்பதாக குறித்த குழந்தையினை / பிள்ளையினை மகவேற்புச் செய்யவதானது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

## 12.சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் கண்காணிப்பில் செயற்படுகின்ற சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்ற குழந்தை /

## பிள்ளை ஒன்றை மகவேற்புச் செய்யப்படுவது தொடர்பில் எத்தகைய நடவடிக்கை முறைகள் பின்பற்றப்படுகின்றன?

மகவேற்புச் செய்வதற்கான கோரிக்கையை முதலில் சிறுவர் நன்னடத்தை அதிகார திணைக்களத்தின் மாகாண ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அல்லது விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள் இடப்பட்டிருக்க வேண்டும்.

சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் குறித்த விண்ணப்பதாரிகளின் பிரதேசத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தை அலுவலருக்கு குறித்த விண்ணப்பதாரிகளின் நிலை அதாவது அவர்களது பொருளாதார நிலை மற்றும் சமூக நிலை பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் செய்வார்.

மாகாண ஆணையாளர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அது தொடர்பில் திருப்திப்படின் குறித்த விண்ணப்பதினை பதிவு செயயும் நடவடிக்கையை மேற்கொள்வார்.

அதனைத் தொடர்ந்து மகவேற்பு செய்ய விரும்பும் குழந்தையை அவர்கள் அடையாளம் காண்பதற்கான அனுமதி விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். அதன்பிரகாரம் விண்ணப்பதாரிகள் தமக்கும் பொருத்தமான குழந்தையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட குழந்தையை மகவேற்பு செய்ய வதற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்காதவிடத்து அத்துடன் வேறெவரும் அதே குழந்தையை மகவேற்பு

செய்வதற்கு விண்ணப்பித்து இருக்காதவிடத்து ஒரு சட்டத்தரணியூடாக மாவட்ட நீதிமன்றத்திற்கு மகவேற்பு கட்டளையை பெறும் பொருட்டு விண்ணப்பதினை தாக்கல் செய்தல் வேண்டும்.

## 13.மகவேற்புச் செய்வதற்கான மாகாண ஆணையாளரின் அனுமதி விண்ணப்ப தாரிகளுக்கு வழங்கப்பட்ட தினத்தில் இருந்து எத்தனை நாட்களுக்குள் அவர்கள மகவேற்புக் கட்டளையை பெறுவதற்கான விண்ணப்பதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் வேண்டும்?

மேற்கூறப்பட்ட அனுமதி பெறப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாதத்திற்குள் செய்யப்படல் வேண்டும்.

நீதிமன்றமானது குறித்த விண்ணப்பம் தொடர்பில் திருப்திப்படுமிடத்து, மகவேற்பு தொடர்பான ஒரு இடைக்கால கட்டளையை அல்லது இறுதிக் கட்டளையை வழங்கும்.

நீதிமன்றமானது குறித்த விண்ணப்பம் தொடர்பில் திருப்திப்படுமிடத்து, மகவேற்பு தொடர்பான ஒரு இடைக்கால கட்டளையை அல்லது இறுதிக் கட்டளையை வழங்கும்.

## இடைக்காலக் கட்டளை

நீதிமன்றம் குறித்த மகவேற்பு தொடர்பில் மகவேற்பு கட்டளையை தாமதிக்க வேண்டி ஒரு தகுதிகாண் காலத்திற்கு குறித்த குழந்தையை மகவேற்பிற்கு விண்ணபபம் செய்தவரிடம் ஒப்படைக்கலாம். இக்காலப் பகுதியானது ஆகக்கூடியது 2 வருடங்களாக இருக்க முடியும். இதன் போது மகவேற்பிற்கு விண்ணப்பித்தவர்

அக்குழந்தைக்கு போதியளவு பராமரிப்பு கல்வி போன்றவற்றை வழங்க வேண்டும்

## இறுதிக்கட்டளை

மகவேற்பாளர் தொடர்பில் நீதிமன்றம் திருப்தியடையுமிடத்து இறுதிக்கட்டளையை வழங்கும். அதன் பின்னர் இக்குழந்தை மகவேற்பாளரின் சட்டப்படியான வாரிசாக கருதப்படும்.

## 14. அவ்வாறாக குழந்தையை / பிள்ளையை மகவேற்புச் செய்வதை அனுமதிப்பதான கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கும்போது, குறித்த குழந்தைக்கு / பிள்ளைக்கு புதிய பெயர் வைப்தற்கான உரிமை மகவேற்பு பெற்றோருக்கு உண்டா?

ஆம். குறித்த குழந்தைக்கு / பிள்ளைக்கு புதிய பெயர் வைப்பதற்கான அனுமதியையும் தமது விண்ணப்பத்தில் ஒரு நிவாரணமாகக் கோரி, அதன் பிரகாரம் புதிய பெயர் வைப்தற்கான அனுமதியையும் பெற்று தமது அத்தகைய உரிமையைச் செயற்படுத்தலாம்.

## 15. அவ்வாறாக மகவேற்புக் கட்டளை நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பின்னர், மகவேற்புப் பெற்றோர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்?

- மகவேற்புப் பெற்றோர் குழந்தைக்கு புதிய பிறப்பு அத்சாட்சிப் பத்திரத்தினை பெறவேண்டும.

- மகவேற்புப் பெற்றோருக்காக நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி மகவேற்புக் கட்டளையின் பிரதி ஒன்றினை நீதிமன்றத்தின் பதிவாளர் ஊடாக பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதறகாகன நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

## 16. மகவேற்பு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளையொன்று தத்தெடுக்கப்பட்ட பின்பு , குறித்த பிள்ளைக்கும் மகவேற்புப் பெற்றோருக்குமிடையிலான சட்டரீதியான உறவுமுறை எத்தகையது?

இயற்கைப் பிள்ளையொன்றுக்குரிய அத்தகைய உரிமைகள் யாவும் பெற்றோரின் மீதும் பெற்றோரது ஆதனங்களின் மீதும் உரித்துக்களைப் பெறுவதற்கு பிள்ளை உரித்துடையது.

மகவேற்புப் பெற்றோர் இறுதிவிருப்பாவணம் எதுவுமின்றி ஆதனங்களை விட்டு இறக்குமிடத்து இயற்கைப் பிள்ளை எத்தகைய வழியுரிமைக்கு உரித்துடையதோ அதே விதமாக மகவேற்கப்பட்ட பிள்ளையும் மகவேற்புப் பெற்றோரிடமிருந்து வழியுரிமை ரீதியான உரித்துக்களைப் பெறுவதற்கு உரித்துடையது.

## 17. மகவேற்பு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளையொன்று தத்தெடுக்கப்பட்ட பின்பு, குறித்த பிள்ளைக்கும், அப்பிள்ளையினது முன்னைய இயற்கைப் பெற்றோருக்கும் இடையிலான சட்டரீதியான உறவுமுறை எத்தகையது?

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மகவேற்புக் கட்டளை வழங்கப்பட்டதன் மேல் பிள்ளையினது இயற்கைப் பெந்றோர், அப்பிள்ளையினது பெற்றோர் என்ற ஸ்தானத்தை சட்டத்தின் பிரகாரம் இழக்கின்றார்கள்.

இயற்கைப் பெந்றோர் என்ற ஸ்தானத்தினை இழப்பதுடன் மட்டுமல்லாது, குறித்த பிள்ளையின் மீது இருக்கக் கூடிய சகல விதமான உரிமைகளையும் நிரந்தரமாகவே இழக்கின்றார்கள்.. .

## 18. தேசவழமை, கண்டியச் சட்டம் மற்றும் முஸ்லீம் சட்டம் என்பவற்றால் ஆளப்படும் நபர்கள் 1941ஆம் ஆண்டின் 24ஆம் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிள்ளையொன்றை மகவேற்புச் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளாரா?

ஆம், மேற்குறித்த சட்டங்களினால் ஆளப்படும் நபர்கள் குறித்த 1941ம் ஆண்டின் 24ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பிள்ளையொன்றை மகவேற்புச் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள்.

இத்தகைய சட்டநிலைமையை வழக்கின் தீர்ப்பு எடுத்துரைக்கின்றது.

## வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் பிள்ளைகளைத் மகவேற்பது (தத்தெடுப்பது) தொடர்பான நடபடிமுறைகள்:

## 18.வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் பிள்ளைகளைத் தத்தெடுக்க முடியுமா?

எந்த நாட்டுப் பிரஜாவுரிமையையும் கொண்டுள்ள எந்தவொரு தம்பதியினரும் இலங்கையில் குழந்தையொன்றை தத்தெடுக்க விண்ணப்பம் செய்ய முடியும்.

## 19.வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் பிள்ளைகளைத் தத்தெடுக்கும் போது கவனத்தில் எடுக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் எவை?

தத்தெடுப்பு செய்ய விண்ணப்பிக்கும் குழந்தையானது அரசினால் நடத்தப்படும் அனாதை இல்லமொன்றில் அனாதைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனாதை இல்லமொன்றின் குழந்தையாக இருக்க வேண்டும்.

மேலும் சிறுவர் நன்னடத்தை ஆணையாளரினால் மேற்கூறப்பட்ட இல்லமொன்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குழந்தையாக இருக்க வேண்டும்.

மேலும் விண்ணப்பகாரர்கள் தொடர்பில் அவர்களது நாட்டின் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனமொன்றின் மூலம் பெறப்பட்ட சமூக மற்றும் சூழல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அவர்களது நாட்டில் அவர்கள் குடியிருக்கும் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இவையாவும் அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதராகத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இவையாவும் சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை ஆணையாளரின் அறிக்கையுடன் நீதிமன்றத்தில் மகவேறபுக்கான விண்ணப்பத்தை மேற்கொள்ளும்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தனிப்பட்ட வெளிநாட்டவர் ஒருவர் குழந்தையை மகவேற்பு செய்ய முடியாது.

திருமணம் செய்த கணவனும் மனைவியும் இணைந்து மாத்திரமே மகவேற்பு செய்ய முடியும்.

25 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

மகவேற்பு செய்யப்படவுள்ள குழந்தையை விட ஆகக் குறைந்தது 21 வயது அதிகமானவராக இருக்க வேண்டும.

சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளரின் விசேட அனுமதி பெறப்பட வேண்டும்.

## 20.வெளிநாட்டுப் பிரஜைகளான தம்பதியினர், இலங்கையில் உள்ள தமக்கு நன்கு அறிமுகமான அல்லது இரத்த உறவுக்காரக் குழந்தை ஒன்றை மகவேற்புச்செய்ய விரும்புவார்களாயின் பின்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் எவை?

ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ள மகவேற்புத் தொடர்பான நடவடிக்கைமுறையில் ஒரேயொரு நவடிககை மட்டும் தவிர்க்கப்படுகின்றது.

அதாவது குழந்தைகயைத் தத்தெடுப்பதற்கான விண்ணப்பத்தை ஆணையாளருக்கு சமர்ப்பித்ததன்

பின்னர், குழந்தையை அடையாளம் காணுவதற்கான ஆணையாளரின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்ற வரையான தேவைப்பாட்டை தவிர ஏனைய அனைத்து நடவடிக்கை முறைகளும் பின்பற்றப்படல் வேண்டும்.

**21. நீதிமன்ற கட்டளையொன்றின் பிரகாரம் பிள்ளையை தத்தெடுத்துக் கொண்ட வெளிநாட்டுப் பிரஜைகளான தம்பதியினர், தமது நாட்டுக்கு குறித்த பிள்ளையை அழைத்துச் சென்றதன் பின்னர் அப் பிள்ளை தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடிவடிக்கை முறைகள் எவை?**

அந்த வெளிநாட்டு தம்பதியினர் பிள்ளையின் 10 வயது வரை பிள்ளையின் முன்னேற்ற அறிக்கையை சிறுவர் நன்னடத்தை அதிகார திணைக்களத்தின் மாகாண ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

**22. குழந்தையொன்று தத்தெடுக்கப்படுவதற்கான கட்டளையொன்றைப் பெறும் நோக்கில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளை எடுத்துரைக்கின்ற சட்ட ஏற்பாடுகள் எவை?**

1941ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க மற்றும் 1943ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டங்கள் குழந்தைகளைத் தத்தெடுப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளை எடுத்துரைக்கின்றன.

குழந்தையொன்று தத்தெடுக்கப்படுவதற்கான கட்டளை யொன்றை பெறுவதற்கு மனு மற்றும் சத்தியப் பத்திரம்

ஆகியவை மூலம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கப் படுவதுடன், இயற்கைப் பெற்றோரின் அல்லது இயற்கைத் தாயின் சம்மதத்தை வெளிப்படுத்தும் சத்தியப் பத்திரம் என்பனவும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 23. ஒரே குழந்தையை மகவேற்பு செய்யும் பொருட்டு ஒன்றிற்கு மேற்பட்ட தம்பதியினர் மாகாண ஆணையாளருக்கு விண்ணப்பிம் செய்துள்ள சந்தர்ப்பத்தில் பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை எத்தகையது?

ஒரே குழந்தையின் மகவேற்பிற்கான ஒன்றிற்கு மேற்பட்ட கோரிக்கைகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் மாகாண ஆணையாளரை தலைவராக கொண்டு அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சபை ஒவ்வொரு விண்ணப்பதாரியையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தும்.

இந் நடவடிக்கை மூலம் மிகவும் பொருத்தமான மகவேற்பாளர் தெரிவு செய்யப்படுவார். பின்னர் அதே குழந்தையின் மகவேற்பிற்காக விண்ணப்பித்த மற்றய பெற்றோருக்கு அவர்களது மறுப்பினை குறித் பரீட்சார்த்த சபைக்கு தெரிவிப்பதன் பொருட்டு இத்தீர்மானமானது வெளியிடப்படும்.

குறித்த பெற்றோர் தமது மகவேற்பு விண்ணப்பம் மீண்டும் கருத்திலெடுக்கப்பட வேண்டும் என கருதும் சந்தர்ப்பத்தில் தமது மேன்முறையீட்டினை ஆணையாளருக்கு செய்ய வேண்டும். அதன் பின்னர் சகல மேன்முறையீடுகளும் மதிப்பீட்டு சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு மிகவும் பொருத்தமான மகவேற்பாளர் தீர்மானிக்கப்படுவார்.

குறித்த தீர்மானம் தெரிவிக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் தெரிவு செய்யப்பட்ட மகவேற்பாளர் ஒரு சட்டத்தரணியூடாக மகவேற்பிற்காக மாவட்ட நீதிமன்றில் வழக்கினை தாக்கல் செய்தல் வேண்டும்.

# முஸ்லீம்கள் பிள்ளையை மகவேற்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள்:

## 24. மகவேற்பு தொடர்பில் முஸ்லீம்களுக்கு ஏற்புடைய சட்டம் எது?

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள நியதிச் சட்டங்களான **1941ஆம் ஆண்டின் 24ஆம்** இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம் உயஅந , **1943ஆம் ஆண்டின் 54ஆம்** இலக்க மகவேற்புத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் மற்றும் **1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க குழந்தைகள் மகவேற்பு (திருத்தச்) சட்டம் என்பவையே முஸ்லீம்களுக்கும் ஏற்புடைய சட்டம் ஆகும்.

**Section 2 of the Adoption of Children Ordinance of 1941 provides"**

**"Any person desirous of being authorised to adopt a child may make application to the court... and the court may..... make an order. (adoption. order) authorising the person to, adopt the child."**

முஸ்லீம்களும் **1941ஆம் ஆண்டின் 24ஆம்** இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பிள்ளையொன்றை மகவேற்பு செய்யமுடியும் என்பதற்கு ஆதாரமாக உயர் நீதிமன்றத்தினால் **GHOUSE Vs. GROUSE – 1987 (1) SLR 25** வழக்கில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## 25. முஸ்லீம் தம்பதியினர் முஸ்லீம் குழந்தை / பிள்ளை ஒன்றை மகவேற்புச் செய்யவதாயின் அது தொடர்பான விண்ணப்பத்தை எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்?

முஸ்லீம் தம்பதியினர் அல்லது முஸ்லீம் குழந்தை ∴ பிள்ளை குடியிருக்கும் பிரதேசத்தில் செயற்படுகின்ற மாவட்ட நீதிமன்றத்தில் பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்வதற்கான வழக்கைத் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

## 26. முஸ்லீம் தம்பதியினர் முஸ்லீம் குழந்தை ஒன்றை மகவேற்புச் செய்திருக்கையில் அவர்கள் இறுதி விருப்பாவணம் எதுவுமின்றி இறக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த பிள்ளை மகவேற்புப் பெற்றோரது ஆதனங்களுக்கு வழியுரிமை உரித்தைக் கோருவதற்கு உரித்துடையவரா?

இல்லை, முஸ்லிம் பெற்றோரால் மகவேற்புச் செய்யப்பட்ட பிள்ளையொன்று மகவேற்புப் பெற்றோர் அவர்களுடைய ஆதனம் தொடர்பில் எவ்விதமான இறுதிவிருப்பாவணம் எதுவுமின்றி அப் பெற்றோர் இறக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளை அவர்களது ஆதனத்திற்கு வழியுரிமை உரித்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லை.

எனவே மகவேற்ப்புப் பிள்ளை குறித்த பெற்றோரது ஆதனங்களின் மீது வழியுரிமை ரீதியான உரித்தைக் கோரமுடியாது.

இவ்விடயம் தொடர்பில் **GHOUSE Vs. GHOUSE- 1988(1) SLR 25** வழக்கின் விரிவாக ஆராயப்பட்டு குறித்த மகவேற்புப் பிள்ளையானது, மகவேற்புப் பெற்றோரின் இறப்புக்குப் பின் இறுதி விருப்பாவணம் எதுவுமின்றி அவர்களால் விட்டுச் செல்லப்படுகின்ற ஆதனங்களின் மீது எந்த விதத்தில் வழியுரிமை உரித்தைக் கோர முடியாது என உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## சட்டரீதியற்ற மகவேற்பின் விளைவுகள்

### 27. சட்டரீதியான மகவேற்பு நடவடிக்கையை திறத்தவர்கள் மேற்கொள்ளாமல் குழந்தை ∴ பிள்ளை ஒன்றினை கொள்வனவு செய்ய அல்லது விற்பனை செய்ய முடியுமா?

இல்லை. அவ்வாறு செய்யப்படுவதை சட்டம் தடைசெய்கின்றது.

மகவேற்பு (தத்தெடுப்புச்) செய்யாமல் ஒருவர் குழந்தை ∴ பிள்ளை ஒன்றினை மற்றவரிடம் பெற்றுக்கொள்வதற்காக அவருக்கு பணம், பரிசு அல்லது வேறு வெகுமதிகளைக் கொடுக்க உடன்படுதல் அல்லது கொடுத்தல்,

அதேபோன்று இவ்விடயம் தொடர்பில பணம், பரிசு அல்லது வேறு வெகுமதிகளைக் பெற்றுக்கொள்ள உடன்படுதல் அல்லது பெற்றுக்கொள்ளுதல், என்பன

**1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க குழந்தைகள் மகவேற்பு (திருத்த) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளன.

மகவேற்பு செயற்பாட்டில் சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் இம்மகவேற்பின் நோக்கத்திற்காக எவருக்கேனும் பணம் கொடுப்பதோ அல்லது எவரிடம் இருந்தேனும் பணம் பெறுவதோ தற்போது இலங்கையில் நடைமுறையில் **1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க குழந்தைகள் மகவேற்பு (திருத்தச்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ள சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றமாகும்.

## 28. இக்குற்றத்தின் பாரதூரமான தன்மை எத்தகையது?

ஒரு நீதிவான் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் பின்வரும் தண்டனைகள் வழங்குப்படலாம்.

**1992ஆம் ஆண்டின் 15ஆம்** இலக்க மகவேற்பு (திருத்தச்) சட்டத்தின் **பிரிவு 06** இன் பிரகாரம் நீதிவானால் தண்டனையாக விதிக்கப்படலாம்.

i. ரூபா பத்தாயிரத்துக்கு மேற்படாத குற்றப்பணத்ததை செலுத்துமாறு, அல்லது

ii. இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது ஒத்திவைக்கப்பட சிறைத்தண்டனை, அல்லது

iii. குறித்த குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை இரண்டும்,



**பிள்ளையினை மகவேற்பு செய்வதற்கான நீதிமன்றக் கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கான மனு மற்றும் சத்தியப் பத்திரம் (PETITION AND AFFIDAVIT) என்பவற்றின் மாதிரிகள்:**

**(மாதிரி: 01).**

**மனு:**

**<u>மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை</u>**

மகவேற்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 76ன்) ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளை ''பிரியா சங்கர்'' என்பவரை மகவேற்புச் செய்வது தொடர்பான விண்ணப்பம்.

-----------------------------------------------------------------------------

திருமதி.வசந்தி சத்தியன்,
இல.16, மத்திய வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

**வழக்கு இல:** **-மனுதார்-**

**எதிர்**

1. செல்வி. பிரியா சங்கர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

2. சந்திரன் இராஜன்,
பொறுப்பாளர்,

''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

3. முத்தையா சங்கர்,
இல.1026.̇.09இ
6ம் கொலனி,
பன்குளம், திருகோணமலை.

4. நன்னடத்தை உத்தியோகத்தர்,
நன்னடத்தை உத்தியோகத்தர்அலுவலகம்,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
திருகோணமலை.

**- எதிர் மனுதாரர்கள் -**

**2011 ம் ஆண்டு மாதம் ஆம் நாள்**

சட்டத்தரணி உதயா குகா மூலம் தோற்றும் மனுதாரரின் மனு பின்வருமாறு கூறுகின்றது.

1. மனுதாரின் வதிவிடமும் மற்றும் இவ்வழக்கின் 1ம் , 2ம் 3ம் எதிராளிகளின் வதிவிடமும் இந் நீதிமன்ற நிர்வாக நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ளன.

2. மனுதார் 'தேவன் சத்தியன்' என்பவரை 2000ம் வருடம் ஜனவரி மாதம் 25ம் நாளன்று சட்டரீதியாகத் திருமணம் செய்துள்ளார். குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும் திருமணச் சான்றிதழ் **இல.104ன்** உண்மைப் பிரதி இத்துடன் **"ம-1"** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

3. மனுதார் மேற்சொல்லப்பட்டவாறு திருமணம் செய்து இற்றைக்கு பத்து வருடங்களுக்கு மேல் கழிந்த பின்பும் கூட துரதிஸ்டவசமாக தம்பதியினருக்கு இதுவரையில் குழந்தைப்பேறு கிடைக்கவில்லை.

3. 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியா'' 2004ம் ஆண்டு யூலை மாதம் 21ம் திகதி பிறந்துள்ளார். 1ம் எதிராளியினது பிறப்புச் சான்றிதழ் **இல.703ன்** உண்மைப் பிரதி **"ம-2"** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

4. 1ம் எதிராளியான பிள்ளை ‘‘பிரியா’’ தற்போது திருகோணமலை, நிலாவெளி, ‘‘அன்பர் சிறுவர் இல்லத்தின்’’ பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றார்.

5. 1ம் எதிராளியான பிள்ளை ‘‘பிரியா’’ 2010 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்று வரையில் தொடர்ச்சியாக திருகோணமலை. நிலாவெளி, ‘‘அன்பர் சிறுவர் இல்லத்தின்’’ பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்றார். இதை உறுதிப்படுத்தும் குறித்த ‘‘அன்பர் சிறுவர் இல்லத்தின்’’ பொறுப்பாளர ‘சந்திரன் இராஜன்’ அவரகளினது கடித்தின் உண்மைப் பிரிதி **“ம-3”** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

6. மனுதார் இல்லத்தரசியாக இருப்பதுடன் அவரது கணவன் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் விஞ்ஞானிமானிப் பட்டம் பெற்றவர் ஆவார்.

7. மனுதாரரின் கணவர் தற்போது மலேசியாவில் பொறியலாளராக தொழில் புரிந்து வருகின்றார்.

8. மனுதாரரின் கணவன் அங்கு தற்போது சிவில் சேவை பொறியியலாளராக கடமையாற்றுவதுடன் அவர் மாதாந்தம் இலங்கை நாணயப்படி ரூபா நான்கு இலட்சமக்கு (ரூபா:400,000.00) மேற்பட்ட தொகையைப் மாதாந்த சம்பள மாகப் பெற்று வருகின்றார். மனுதாராது கணவரது மாதாந்த சம்பள விபரத்தின் உண்மைப் பிரதி **“ம-4”** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்பட்டுள்ளது).

9. மனுதாரரும் அவரது கணவரும் இவ்வழக்கின் 1ம் எதிராளியான பிள்ளை ‘‘பிரியாவை’’ விட இருபத்தொரு வருடங்களுக்குக் கூடுதலாக வயதில் மூத்தவர்கள். மனுதாரின் பிறப்புச் சான்றிதழ் **இல. 450ன்** உண்மைப் பிரதி **“ம-5**’’ எனவும் மற்றும் மனுதாரினது கணவனின் பிறப்புச் சான்றிதழ் **இல.514ன்** உண்மைப் பிரதி ‘‘**ம**-6’’ எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

10. மனுதார் ஓர் இலங்கைப் பிரஜை என்பதுடன் இலங்கையை வாழிடமாகவும் கொண்டுள்ளார். மனுதாரின் இல்ஙகைக் கடவவுச்சீட்டு **இல: N 2464867ன்** உண்மைப் பிரதி ‘‘**ம-7**’’ எனவும் மற்றும் மனுதாரினது கணவனின் இல்ஙகைக்

கடவவுச்சீட்டு **இல. N 2464868ன்** உண்மைப் பிரதி **''ம-8''** எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

11. மனுதாரரும் அவரது கணவரும் தற்போது பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமையையும் பெற்று இரட்டை பிரஜா உரிமையை கொண்டவர்களாக இருந்து வருகின்றார்கள் . மனுதாரினது பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமைச் சான்றிதழ் இல. **யு 5086164ன்** உண்மைப் பிரதி **"ம-9"** எனவும் மற்றும் மனுதாரினது கணவனின் பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமைச் சான்றிதழ் இல. **யு 5086163 ன்** உண்மைப் பிரதி **"ம-10"** எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

12. மனுதார் குறித்த வழக்கின் 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியாவை'' முறையாகவும் சட்டப்படியும் மகவேற்புச் செய்ய விரும்புகின்றார்.

13. இந்த வழக்கின் 4ம் எதிராளியான நன்னடத்தை உத்தியோகத்தர், இவ்வழக்கின் விசாரணையை முறையே நடாத்துவதற்கு மன்றுக்கு உதவும் நோக்கத்துக்காக இவ்வழக்கின் ஒரு திறத்தவராகச் சேர்க்ககப்பட்டுள்ளார்.

14. திருகோணமலை. நிலாவெளி, ''அன்பர் சிறுவர் இல்லத்தின்'' பொறுப்பாளரும் இவவழக்கின் 2ம் எதிராளியுமான 'சந்திரன் இராஜன்'' அவர்கள், இவ்வழக்கு விசாரணையின்போது 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியாவின்'' நலன்களைக் கவனிப்பதற்காக அவரின் பாதுகாவலராக மன்றினால் நியமிக்கபடுவதற்கு பொருத்தமும் தகுதியும் உடைய நபர்.

15. குறித்த பிள்ளையை மனுதார் மகவேற்புச் செய்வதற்கான மனுதாரின் கணவனின் சம்மதப் பத்திரம் **"ம-13"** என அடையாளமிட்டு இத்துடன் அணைக்கப்படுகின்றது.

16. குறித்த பிள்ளை ''பிரியா'' வின் தாயாரர் தற்போது உளநலம் பாதிககப்பட்டவராக வாழ்ந்து வருகின்றார்.

17. மனுதார் மேற்சொல்லப்பட்ட நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் முகமாக இம்மனுவுடன் தனது சத்தியக் கடதாசியையும் இணைத்துள்ளார்.

**எனவே மனுதார் மன்றிடம் பின்வரும் நிவாரணங்களை வேண்டுகின்றார்.**

**அ)** இவ்வழக்கு விசாரணையின் நோக்கங்களுக்காக திருகோணமலை, நிலாவெளி, ''அன்பர் சிறுவர் இல்லத்தின்'' பொறுப்பாளரும் இவவழக்கின் 2ம் எதிராளியுமான 'சந்திரன் இராஜன்' அவர்களை் இவ்வழக்கு விசாரணைசெய்யப்பட்டு தீரப்பு அளிக்கப்படும் காலமவரையில், 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியாவின்'' பாதுகாவலராக நியமிக்கும் கட்டளை ஒன்றை ஆக்கும் படியும்.

(**ஆ**) 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியாவை'' மகவேற்புக் கட்டளைக் சட்டத்தின் கீழ் மகவேற்புச் செய்வதற்கு மனுதாரரை அனுமதிப்பதான கட்டளை ஒன்றை ஆக்கும் படியும்.

(**இ**) 1ம் எதிராளியான பிள்ளை ''சங்கீதாவின்'' பிறப்புச் சான்றிதழில் தேவையான மேலதிக தகவல்களைச் சேர்ப்பதுடன், தேவையான திருத்தங்களை செய்யும்படியுயும் பதிவாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கும் கட்டளை ஒன்றை ஆக்கும் படியும்.

(**ஈ**) மற்றும் இந் நீதிமன்றம் உசிதமானதும் பொருத்தமானது மெனக் கருதும் ஏனைய நிவாரணங்களும்.

**மனுதாரின் சட்டத்தரணி**

(மாதிரி: 02).

## சத்தியப் பத்திரம் (AFFIAVIT) :

### <u>மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை</u>

மகவேற்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 76ன்) ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளை ''பிரியா சங்கர்'' என்பவரை மகவேற்புச் செய்வது தொடர்பான விண்ணப்பம்.

திருமதி.வசந்தி சத்தியன்,
இல.16, மத்திய வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

**வழக்கு இல:** **-மனுதார்-**

**எதிர்**

1. செல்வி. பிரியா சங்கர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

2. சந்திரன் இராஜன்,
பொறுப்பாளர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

3. முத்தையா சங்கர்,
இல.1026/09,
6ம் கொலனி,
பன்குளம், திருகோணமலை.

4. நன்னடத்தை உத்தியோகத்தர்,
நன்னடத்தை
உத்தியோகத்தர்அலுவலகம்,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
திருகோணமலை.

**- எதிர் மனுதாரர்கள் -**

**திருகோணமலை, உவர்மலை, மத்திய வீதி, இல.16 னை சேர்ந்த திருமதி.வசந்தி சத்தியன் ஆகிய நான் உண்மையாகவும் பயபக்தியாகவும் உறுதி செய்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.**

1. எனது வதிவிடமும் மற்றும் இவ்வழக்கின் 1ம், 2ம் 3ம் எதிர் மனுதாரர்கள்களின் வதிவிடமும் இந் நீதிமன்ற நிர்வாக நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ளன.

2. நான் 'தேவன் சத்தியன்' என்பவரை 2000ம் வருடம் ஜனவரி மாதம் 25ம் நாளன்று சட்டரீதியாகத் திருமணம் செய்துள்ளேன். குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும் திருமணச் சான்றிதழ் **இல.104ன்** உண்மைப் பிரதி இத்துடன் **"ம-1"** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

3. நான் மேற்சொல்லப்பட்டவாறு திருமணம் செய்து இற்றைக்கு பத்து வருடங்களுக்கு மேல் கழிந்த பின்பும் கூட துரதிஸ்டவசமாக எங்களுக்கு இதுவரையில் குழந்தைப்பேறு கிடைக்கவில்லை.

4. 1ம் எதிராளியான பிள்ளை "பிரியா" 2004ம் ஆண்டு யூலை மாதம் 21ம் திகதி பிறந்துள்ளார். 1ம் எதிராளியினது பிறப்புச் சான்றிதழ் **இல.703ன்** உண்மைப் பிரதி **"ம-2"** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

5. 1ம் எதிராளியான பிள்ளை "பிரியா" தற்போது திருகோணமலை, நிலாவெளி, "அன்பர் சிறுவர் இல்லத்தின்" பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றார்.

6. 1ம் எதிராளியான பிள்ளை "பிரியா" 2010 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்று வரையில் தொடர்ச்சியாக திருகோணமலை. நிலாவெளி, "அன்பர் சிறுவர் இல்லத்தின்" பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்றார். இதை உறுதிப்படுத்தும் குறித்த "அன்பர் சிறுவர் இல்லத்தின்" பொறுப்பாளர 'சந்திரன் இராஜன்' அவரகளினது கடித்தின் உண்மைப் பிரிதி **"ம-3"** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

7. நான் இல்லத்தரசியாக இருப்பதுடன் எனது கணவன் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் விஞ்ஞானிமானிப் பட்டம் பெற்றவர் ஆவார்.

8. எனது கணவர் தற்போது மலேசியாவில் பொறியலாளராக தொழில் புரிந்து வருகின்றார்.

5. எனது கணவன் அங்கு தற்போது சிவில் சேவை பொறியியலாளராக கடமையாற்றுவதுடன் அவர் மாதாந்தம் இலங்கை நாணயப்படி ரூபா நான்கு இலட்சமக்கு (ரூபா:400,000.00) மேற்பட்ட தொகையைப் மாதாந்த சம்பள மாகப் பெற்று வருகின்றார். எனது கணவரது மாதாந்த சம்பள விபரத்தின் உண்மைப் பிரதி **“ம-4”** என அடையாளமிடப்பட்டு அணைக்கப்பட்டுள்ளது).

6. நானும் எனது கணவரும் இவ்வழக்கின் 1ம் எதிராளியான பிள்ளை ‘‘பிரியாவை’’ விட இருபத்தொரு வருடங்களுக்குக் கூடுதலாக வயதில் மூத்தவர்கள். எனது பிறப்புச் சான்றிதழ் **இல. 450ன்** உண்மைப் பிரதி **“ம-5**’’ எனவும் மற்றும் எனது கணவரின் பிறப்புச் சான்றிதழ் **இல.514ன்** உண்மைப் பிரதி ‘‘**ம**-6’’ எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

7. நான் ஓர் இலங்கைப் பிரஜை என்பதுடன் இலங்கையை வாழிடமாகவும் கொண்டுள்ளேன். எனது இலங்கைக் கடவவுச்சீட்டு **இல: N 2464867ன்** உண்மைப் பிரதி ‘‘**ம-7**’’ எனவும் மற்றும் எனது கணவனின் இலங்கைக் கடவவுச்சீட்டு **இல. N 2464868ன்** உண்மைப் பிரதி ‘‘**ம-8**’’ எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

8. நானும் எனது கணவரும் தற்போது பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமையையும் பெற்று இரட்டை பிரஜா உரிமையை கொண்டவர்களாக இருந்து வருகின்றோம் . எனது பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமைச் சான்றிதழ் இல. **யு 5086164ன்** உண்மைப் பிரதி **“ம-9”** எனவும் மற்றும் எனது கணவனின் பிரித்தானிய நாட்டு பிரயாவுரிமைச் சான்றிதழ் இல. **யு 5086163 ன்** உண்மைப் பிரதி **“ம-10”** எனவும் அடையாளமிடப்பட்டு அணைக்கப்படுகின்றது.

9. நான் குறித்த வழக்கின் 1ம் எதிராளியான பிள்ளை ‘‘பிரியாவை’’ முறையாகவும் சட்டப்படியும் மகவேற்புச் செய்ய விரும்புகின்றார்.

10. இந்த வழக்கின் 4ம் எதிராளியான நன்னடத்தை உத்தியோகத்தர், இவ்வழக்கின் விசாரணையை முறையே நடாத்துவதற்கு மன்றுக்கு உதவும் நோக்கத்துக்காக இவ்வழக்கின் ஒரு திறத்தவராகச் சேர்க்ககப்பட்டுள்ளார்.

11. திருகோணமலை. நிலாவெளி, ''அன்பர் சிறுவர் இல்லத்தின்'' பொறுப்பாளரும் இவவழக்கின் 2ம் எதிராளியுமான 'சந்திரன் இராஜன்' அவர்கள், இவ்வழக்கு விசாரணையின்போது 1ம் எதிராளியான பிள்ளை ''பிரியாவின்'' நலன்களைக் கவனிப்பதற்காக அவரின் பாதுகாவலராக மன்றினால் நியமிக்கபடுவதற்கு பொருத்தமும் தகுதியும் உடைய நபர்.

12. குறித்த பிள்ளையை நான் மகவேற்புச் செய்வதற்கான எனது கணவனின் சம்மதப் பத்திரம் **"ம-13"** என அடையாளமிட்டு இத்துடன் அணைக்கப்படுகின்றது.

13. குறித்த பிள்ளை ''பிரியா'' வின் தாயாரர் தற்போது உளநலம் பாதிககப்பட்டவராக வாழ்ந்து வருகின்றார்.

**14.** மேற்சொல்லப்பட்ட நிகழ்வுகள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என இத்ததால் உறுதிப்படுத்துகின்றேன்.

15. எனவே மனுதாரராகிய நான் எனது மனுவில் கோரியுள்ள நிவாரணங்களை எனக்கு வழங்கும்படி மன்றினை தாழ்மையுடன் வேண்டுகின்றேன.

**வெளிப்படுத்துபவர்**

மேலே விபரிக்கப்பட்டுள்ள யாவற்றையும் நான் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு திருகோணமலையில் வைத்து 2010ம் ஆண்டு மாதம் ஆம் திகதியாகிய இன்று இதில் எனது கையொப்பத்தை இடுகின்றேன்

**என் முன்னிலையில்**

சமாதான நீதிவான்

# மகவேற்புகான விண்ணப்பகாரரின் வாழ்க்கைத் துனையின் சம்மதப் பத்திரம்

**(மாதிரி: 03).**

**சம்மதப் பத்திரம்:**

**<u>மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை</u>**

மகவேற்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 76ன்) ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளை ''பிரியா சங்கர்'' என்பவரை மகவேற்புச் செய்வது தொடர்பான விண்ணப்பம்.

திருமதி.வசந்தி சத்தியன்,
இல.16, மத்திய வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

**வழக்கு இல:** **-மனுதார்-**

**எதிர்**

1. செல்வி. பிரியா சங்கர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

2. சந்திரன் இராஜன்,
பொறுப்பாளர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

3. முத்தையா சங்கர்,

இல.1026.ஃ.09இ
6ம் கொலனி,
பன்குளம், திருகோணமலை.

4. நன்னடத்தை உத்தியோகத்தர்,
நன்னடத்தை
உத்தியோகத்தர்அலுவலகம்,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
திருகோணமலை.

**- எதிர் மனுதாரர்கள் -**

திருகோணமலை, உவர்மலை , மத்தியவீதி, இல.16 ஐச் சேர்ந்தவரும் தற்போது மலேசியாவில் தொழில் புரிந்து வருபவருமாகிய தேவன் சத்தியன் ஆகிய நான் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

நான் தற்போது மலேசியாவில் பொறியியலாளராக தொழில் புரிந்து வருகின்றேன். எனது மனைவியால் ‘பிரியா’ எனும் பெயரைக் கொண்ட பெண் பிள்ளையை மகவேற்புச் செய்வதை அனுமதிப்பதான கட்டளை ஒன்றை பெறுவதற்கான விண்ணப்பமொன்றை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் செய்துள்ளார்.

மகவேற்புக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நானுமொரு திறத்தவராக குறித்த விண்ணப்பத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய போதிலும், நான் மலேசியாவில் தொழில் புரிந்து வருவதன் காரணமாக என்னால் நீதிமன்றிற்கு நேரடியாக சமூகமளிக்க முடியாதிருப்பதனால் இவ்வழக்கின் ஒரு திறத்தவராக சேர்க்கப்படவில்லை.

எவ்வாறாயினும் இவ்வழக்கின் மனுதாரரான எனது மனைவியினால் குறித்த பிள்ளை பிரியாவை மகவேற்புச் செய்வதற்காக செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு எனது பூரண சம்மதத்தை நான் வெளிப்படையாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த பிள்ளையை மகவேற்கப்பட்ட தினத்திலிருந்து குறித்த பிள்ளை தொடர்பாக எனக்குரிய உரிமைகள், கடமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றையும் மற்றும் குறித்த பிள்ளைக்கு என் மீதுள்ள உரிமைகள் , கடமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றையும் நான் நன்கு அறிந்து விளங்கிக் கொண்டு எனது இத்தகைய சம்மதத்தை வெளிப்படுத்துகின்றேன்.

நான், மேற்சொல்லப்பட்ட மனுதாரராகிய எனது மனைவியின் மகவேற்பு தொடர்பான விண்ணப்பத்திற்கு நான் எந்த விதமான ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை என்பதை வெளிப்படுத்தி அதனை உறுதிப்படுத்தும் விதமாக இவ் ஆவணத்தில் 20 ம் ஆண்டு ................. மாதம் ....... ம் திகதி எனது கையொப்பத்தை இடுகின்றேன்.

……………………………..

**(தேவன் சத்தியன்)**

**வெளிப்படுத்துபவர்**

**என் முன்னிலையில்**

**சட்டத்தரணி**

**ம் நாள் மாதம் 2011.**

# மகவேற்புச் செய்யப்படும் பிள்ளையினுடைய தந்தையின் சம்மதப் பத்திரம்

**(மாதிரி: 04).**

**சம்மதப் பத்திரம்:**

**மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை**

மகவேற்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 76ன்) ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளை ''பிரியா சங்கர்'' என்பவரை மகவேற்புச் செய்வது தொடர்பான விண்ணப்பம்.

திருமதி.வசந்தி சத்தியன்,
இல.16, மத்திய வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

**வழக்கு இல:** **-மனுதார்-**

**எதிர்**

5. செல்வி. பிரியா சங்கர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

6. சந்திரன் இராஜன்,
பொறுப்பாளர்,
''அன்பர் சிறுவர் இல்லம'',
நிலாவெளி, திருகோணமலை.

7. முத்தையா சங்கர்,
இல.1026/09,
6ம் கொலனி,
பன்குளம், திருகோணமலை.

8. நன்னடத்தை உத்தியோகத்தர்,
நன்னடத்தை உத்தியோகத்தர்அலுவலகம்,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
திருகோணமலை.

- எதிர் மனுதாரர்கள் -

இவ்வழக்கின் 3ம் எதிர்மனுதாரரும் திருகோணமலை தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை, இல.1026/09 இனைச் சேர்ந்த கந்தையா திருச்செல்வம் ஆகிய நான் ஏழு வயது நிரம்பிய எனது மகள் ‘‘சங்கீதா’’வை மகவேற்புச் செய்வதற்கான மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் கொண்ட விண்ணப்பத்திற்கு எனது பூரண சம்மதத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ற்றும் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான மேலே சொல்லப்பட்ட விண்ணப்பம் அனுமதிக்கப்படும் பட்சத்தில் மகவேற்புச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஏற்படக் கூடிய விளைவுகளான அதாவது, நான் எனது தந்தை என்ற ஸ்தானத்தினை இழந்து விடுவேன் என்பதையும் மற்றும் எனக்கு தந்தை என்ற ஸ்தானத்தில் குறித்த பிள்ளையின் மீது இருக்கக் கூடிய சகல விதமான உரிமைகளையும் நிரந்தரமாகவே இழந்து விடுவேன் என்பதையும் நன்கு அறிந்து கொண்டும் இவ்விண்ணப்பத்துக்கு இத்தால் எனது பூரண சம்மதத்தை வழங்குகின்றேன்.

இதற்கத்தாட்சியாக நான் திருகோணமலையில் வைத்து .........ஆம் **நாள்** **மாதம் 2011 ம்** நாளன்று இதில் எனது இடது கை பெருவிரல் அடையாளத்தை இட்டேன்.

...............................

**வெளிப்படுத்துபவர்**

**என் முன்னிலையில்**

சட்டத்தரணி

20ம் சித்திரை மாதம் 2010.

## GHOUSE Vs. GHOUSE- 1988 (1) SLR 25

**The question of law that arises for decision on the undisputed facts of the case is 'Is a child adopted under the provisions of the Adoption Ordinance by a Muslim Couple, entitled to succeed to the intestate estate of his adoptive parents?'.**

The Adoption of Children Ordinance of 1941 (Cap. 61 ) came into operation on 1st February 1944. Section 2 of the Ordinance provides:

"Any person desirous of being authorised to adopt a child may make application to the court... and the court may..... make an order. (adoption. order) authorising the person to, adopt the child."

The Adoption Ordinance enables "any person desirous of being authorised to, adopt a child" to apply for an adoption, order - Hence a Muslim too is competent to apply for an adoption order and can adopt children in terms of the provisions of that Ordinance. .

The Muslim law postulates consanguinity to qualify oneself for intestate succession. The, Adoption of Children Ordinance being a general law does not abrogate the special law set out in the Muslim Intestate Succession Ordinance which prescribes that intestate succession to any deceased Muslim domiciled in Sri Lanka or owning immovable property in Sri Lanka shall be governed by the Muslim Law applicable to the sect to which the deceased Muslim belonged. The maxim generalia specialibus non derogant applies and the claim of

an adopted child to succeed. to the estate of his adoptive Muslim parent fails as the Muslim law does not recognise adoption, but only birth in` lawful wedlock for intestate succession.